காணொலி மூலம் விவசாயிகள் பிரச்னைகளுக்கு தீர்வு காண

‘கலந்துரையாடல் மூலம் விரிவாக்கம்’ திட்டம்

அமைச்சர் வினோத் தொடங்கி வைத்தார்

சென்னை, ஜூலை 9: காணொலி மூலம் விவசாயிகள் பிரச்னைகளுக்கு தீர்வு காணும் வகையில் ‘கலந்துரையாடல் மூலம் விரிவாக்கம்’ என்ற திட்டத்தை நேற்று வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் வினோத் தொடங்கி வைத்தார்.

இந்த திட்டத்தின் கீழ், காணொலி வாயிலாக விவசாயிகளின் கேள்விகளுக்கு பதிலளித்து, அவர்களின் பிரச்னைகளுக்கு ஒரே தளத்தில் தீர்வு வழங்கும் வகையில், மாநில அளவிலான நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவில் வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த துறைகளான தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், வேளாண்மை பொறியியல் துறை, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம், பட்டு வளர்ச்சித்துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், ஜெயலலிதா மீன் வள பல்கலைக்கழகம், மண்டல வானிலை மையம், சென்னை மற்றும் வங்கி நிபுணர்களும் இடம்பெற்றுள்ளனர்.

நேற்று மாநில அளவிலான நிபுணர் குழு, காணொலி வாயிலாக ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் 25 விவசாயிகளுடன் கலந்துரையாடி விவசாயிகளுடைய பிரச்னைகளுக்கு தீர்வு அளித்தனர். இந்நிகழ்வு மாநிலத்தின் அனைத்து விவசாயிகளும் பயன்பெறும் வகையில் இணைய ஒளிபரப்பு செய்யப்பட்டது.

இந்த திட்ட துவக்க விழாவில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் சங்கர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் சந்திரசேகர் சாகமூரி, வேளாண்மைதுறை இயக்குநர் முரளிதரன், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் விஜயா ராணி, சங்கரலிங்கம் இயக்குநர், சமிதி ஆகியோர் நேரிலும் மற்றும் மாநில நிபுணர் குழு உறுப்பினர்கள், மாவட்ட அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் காணொலி வாயிலாகவும் கலந்து கொண்டனர்.

மின்சார ஒழுங்குமுறை ஆணைய தலைவர் பதவிக்கு விண்ணப்பம் வரவேற்பு

சென்னை, ஜூலை 9: தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தில் தலைவர், உறுப்பினர் (சட்டம்), உறுப்பினர் பதவி காலியாக உள்ளது. இதை நிரப்புவதற்காக ஓய்வு பெற்ற நீதிபதி ஆர்.எம்.டி.டீக்காராமன் தலைமையில் தேர்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு முடிவின்படி, ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் 28.7.2026 அன்று மாலை 6 மணி வரை வரவேற்கப்படுகின்றன. இது குறித்த விவரங்கள் http://www.tn.gov.in/department/7 இணையதள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

பட்ஜெட் விரைவில் தாக்கல் செய்யப்படுவதை தொடர்ந்து

சமூகநீதி துறை, பிற்படுத்தப்பட்டோர் துறை செயல்பாடு குறித்து முதல்வர் ஆலோசனை

▶ சென்னை தலைமை செயலகத்தில், முதல்வர் விஜய் தலைமையில் சமூகநீதி துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் செயல்பாடுகள் குறித்து ஆலோசனை நடைபெற்றது. இதில் அமைச்சர்கள் மரியவில்சன், வன்னி அரசு, தலைமை செயலாளர் சாய்குமார் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

நிதி அமைச்சர், தலைமை செயலாளர் பங்கேற்பு

சென்னை, ஜூலை 9: தமிழக அரசின் பட்ஜெட் விரைவில் தாக்கல் செய்யப்படஉள்ளதால், முதல்வர் விஜய் தலைமையில் சமூகநீதி துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் செயல்பாடுகள் குறித்து ஆலோசனை நடைபெற்றது. இந்த கூட்டத்தில் நிதி அமைச்சர், தலைமை செயலாளர் பங்கேற்றனர்.

முதல்வர் விஜய் பதவியேற்ற பிறகு தமிழகத்தின் முதல் பட்ஜெட் இந்த மாதம் இறுதியில் அல்லது ஆகஸ்ட் மாதம் முதல் வாரம் தாக்கல் செய்யப்படும் என்று கூறப்படுகிறது. பட்ஜெட் கூட்டத்தை தொடர்ந்து அனைத்துதுறை வாரியான மானிய கோரிக்கை கூட்டமும் நடைபெறும்.

இதற்கு முன்னோட்டமாக, முதல்வர் விஜய் அனைத்து துறைகளுடன் கடந்த 2ம் தேதி முதல், வருகிற 22ம் தேதி வரை ஆலோசனை நடத்த திட்டமிட்டுள்ளார். அதன்படி முதல் நாளான கடந்த 2ம் தேதி கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து முதல்வர் விஜய் ஆலோசனை நடத்தினார். இந்த கூட்டத்தில் அமைச்சர் காந்திராஜ், மரியவில்சன், தலைமை செயலாளர் சாய்குமார் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதனை தொடர்ந்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள், உயர் கல்வி மற்றும் பள்ளி கல்வி ஆகிய துறைகள் குறித்த ஆய்வு நடைபெற்றது.

இந்நிலையில், நேற்று தலைமை செயலகத்தில் முதல்வர் விஜய் தலைமையில் சமூகநீதி துறையின் செயல்பாடுகள், நடப்பு நலத்திட்டங்களின் முன்னேற்றம், புதிய திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு உள்ளிட்ட அம்சங்கள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. மேலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகைகள், மாணவர் விடுதிகள் மேம்பாடு, திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டங்கள் ஆகியவை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

அப்போது, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கணக்கெடுப்பு நடத்துவது தொடர்பாகவும் சமூக நீதித்துறை அமைச்சர் வன்னியரசு மற்றும் துறை அதிகாரிகளுடன் முதல்வர் கேட்டறிந்தார். பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை செயல்பாடுகள் குறித்து அமைச்சர் வி.சம்பத்குமார் மற்றும் துறை அதிகாரிகள் விளக்கம் அளித்தனர். அப்போது நிதி அமைச்சர் மரியவில்சன், தலைமை செயலாளர் சாய்குமார் உடன் இருந்தனர்.

வருகிற 22ம் தேதி உள்துறை, மதுவிலக்கு மற்றும் கலால் துறை அதிகாரிகளுடன் முதல்வர் தனது ஆய்வை நிறைவு செய்கிறார். இந்த ஆய்வு கூட்டத்தில், துறை சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், செயலாளர்கள், உயர் அதிகாரிகள் கலந்து கொள்கிறார்கள். இந்த ஆலோசனை கூட்டத்தில் எடுக்கும் முடிவுகள் தமிழக அரசு பட்ஜெட்டில் இடம்பெறும்.

ஊழல பத்தி நீங்க பேசாதீங்க அசிங்கப்பட்டு போவீங்க..!

நயினார் மீது மாணிக்கம் தாகூர் சாடல்



சென்னை, ஜூலை 9: மேகதாது அணை விவகாரத்தில், தமிழக காங்கிரஸ் கட்சியின் கருத்தை நயினார் நாகேந்திரன் கிண்டலடித்திருப்பது வேடிக்கையாக உள்ளது என்று மாணிக்கம் தாகூர் கூறியுள்ளார்.

தமிழக காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

‘கர்நாடக அரசு மேகதாது அணை கட்ட, ஒரு செங்கல்லை கூட வைக்க அனுமதிக்க மாட்டோம், அணை கட்டுவதை எதிர்த்து போராட்டம் நடத்துவோம், என்று நான் கூறியதை, தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் கேலியும், கிண்டலுமாக விமர்சித்திருக்கிறார்.

தமிழ்நாட்டில் குற்றுயிரும், குலையுயிருமாக இருந்த பாஜ, கடந்த மே மாதம் 4ம்தேதி சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு, இருந்த இடம் தெரியாத அளவுக்கு காணாமல் போய் விட்டது. தமிழ்நாட்டு மக்களால் முற்றிலும் நிராகரிக்கப்பட்ட பாஜவின் மாநில தலைவராக இருந்து கொண்டு, கொஞ்சம் கூட கூச்சம் இல்லாமல், மேகதாது அணை விவகாரத்தில் தமிழக காங்கிரஸ் கட்சியின் கருத்தை நயினார் நாகேந்திரன் கிண்டலடித்திருப்பது வேடிக்கையாக இருக்கிறது.

கர்நாடகத்தில் பாஜ ஆட்சி நடந்த போது முதல்வராக இருந்த எடியூரப்பா, பசவராஜ் பொம்மை போன்றவர்கள், மேகதாது அணையை கட்டியே தீருவோம். தமிழ்நாட்டிற்கு தண்ணீர் திறக்க மாட்டோம், என்று முழங்கியதை எல்லாம் நயினார் நாகேந்திரன் மறந்து விட்டார் என்று நினைக்கிறேன்.

நதிநீர் விவகாரம் உள்பட இரு மாநிலங்களுக்கு இடையிலான எந்த பிரச்னையையும், சுமூகமாக தீர்க்க வேண்டியது ஒன்றிய அரசின் பொறுப்பு. பிரதமரின் கடமை. ஆனால், அந்த கடமையை செய்யாமல் தமிழ்நாட்டை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் ஒன்றிய பாஜ அரசு நடத்தி வருகிறது. அதனால் தான் தமிழ்நாட்டு மக்கள் பாஜவை ஒரு போதும் ஏற்றுக் கொள்வதில்லை.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, பிரச்னைக்கு சுமூக தீர்வு காணாமல், இரு மாநிலங்களுக்கிடையே மோதலை ஏற்படுத்தும் வகையில் அரசியல் நாடகத்தை மோடி அரசு அரங்கேற்றி வருகிறது. காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டக்கூடாது என்பதுதான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் நிலைப்பாடு. மேகதாது அணை கட்டுவதை தடுக்க தமிழக காங்கிரஸ் எந்த தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கிறது.

அரசு வழக்கறிஞர் நியமனத்தில் முறைகேடு நடந்திருப்பதாக தவெக அரசு மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டை நயினார் நாகேந்திரன் சுமத்தியிருக்கிறார். ஊழல் பற்றி பேசும் போதெல்லாம் பாஜ தலைவர்கள் தங்களை கண்ணாடியில் பார்த்துக் கொள்வது நல்லது. இல்லையென்றால் அசிங்கப்பட்டு போவீர்கள்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ஒரு மாதம் ஆகியும் மாணவர்களுக்கு... முதல் பக்க தொடர்ச்சி

புத்தகங்களைக்கூட வழங்க முடியாத ஒரு சூழலில் நாம் இருக்கிறோம் என்றால், தமிழகக் கல்வித்துறை எந்த அளவுக்குக் கீழ்நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

முன்னாள் கல்வி அமைச்சராகவும், தற்போது சீனியர் அமைச்சராகவும் இருப்பவர்கள் கூட இப்பிரச்னையில் உரிய கவனம் செலுத்தி, அமைச்சரவைக் கூட்டங்களில் இது போன்ற முக்கியப் பிரச்னைகளை விவாதித்து ஏன் விரைவான நடவடிக்கை எடுக்கவில்லை என்பது தெரியவில்லை. அனுபவம் வாய்ந்தவர்கள் இருக்கும் போதே இந்த நிலை நீடிப்பது பெரும் பின்னடைவாகும்.

இன்றைய காலகட்டத்தில் கல்விக்கூடங்கள் தங்களின் முதன்மைநோக்கமான கல்வியை முன்னிலைப்படுத்துவதை விட்டு விட்டு, சினிமா, பாடல்கள் மற்றும் பல்வேறு விழாக்களைக் கொண்டாடுவதற்கே அதிகமுக்கியத்துவம் கொடுத்து வருகின்றன. விழாக்களுக்குக் கொடுக்கும் முன்னுரிமையைக் கல்விக்குக்கொடுக்காமல், கல்வியைப்பின்னோக்கித் தள்ளிக் கொண்டிருக்கிறோம். இது நாம் சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறோம் என்பதற்கான அறிகுறி அல்ல.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசு மற்றும் பள்ளிக்கல்வித்துறை இந்த விவகாரத்தில் உடனடியாகத் தலையிட்டு, மாணவர்களின் கல்வி பாதிக்கப்படாத வண்ணம் இன்னும் ஓரிரு தினங்களுக்குள் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து அரசுப் பள்ளி மாணவர்களுக்கும் பாடப் புத்தகங்களை முழுமையாக விநியோகம் செய்ய விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே ஒட்டுமொத்த பெற்றோர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

மதம் மாறிய இஸ்லாமியர்களின்

இடஒதுக்கீடு உரிமைக்கான சட்டத்திருத்தம் தேவை

முன்னாள் நீதிபதி, முன்னாள் அமைச்சர் வலியுறுத்தல்

சென்னை, ஜூலை 9: சிறுபான்மை மக்களுக்கு எதிரான தீர்ப்புகள் மற்றும் சட்ட நடவடிக்கைகள் குறித்து ஓய்வுபெற்ற நீதிபதி அரிபரந்தாமன், முன்னாள் அமைச்சர் மனோதங்கராஜ், சட்டமன்ற உறுப்பினர் ஜவாஹிருல்லா உள்ளிட்டோர், சென்னை பத்திரிக்கையாளர் மன்றத்தில் கூட்டாக நிருபர்களை சந்தித்தனர். அப்போது அவர்கள் பேசியதாவது:

மதம் மாறிய இஸ்லாமியர்களின் இடஒதுக்கீடு தொடர்பான சமீம் அகமது வழக்கின் தீர்ப்பில், இஸ்லாமை ஒட்டுமொத்தமாக மதமாற்ற மதமாக சித்தரிக்கும் வகையிலான கருத்து பதிவு செய்யப்பட்டுள்ளது. வழக்கை சட்டப்படி முடிவு செய்வதற்கு அவசியமில்லாத இத்தகைய பொதுமைப்படுத்தப்பட்ட கருத்து ஒரு குறிப்பிட்ட மதத்தை தேவையின்றி குறிவைப்பதாக புரிந்துகொள்ளப்படும். அதேபோல் தவெக அரசு பொறுப்பேற்றதும் அமைப்புகள் மற்றும் இயக்கத்திற்கு சுதந்திரமாகிவிட்டது என கூறுகிறார்.

சமீம் அகமது வழக்கில், ஜி.ஆர்.சுவாமிநாதன் அளித்த தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை திரும்பி பெற வேண்டும். மேலும் சமூக மற்றும் கல்வி ரீதியாக பின்தங்கிய மதம் மாறிய இஸ்லாமியர்களின் இடஒதுக்கீட்டு உரிமையை நிலைநிறுத்தும் வகையில் சட்டத்தில் தேவையான திருத்தங்களை தமிழக அரசு உடனடியாக கொண்டு வர வேண்டும். இதுவே, நிரந்தரமான மற்றும் சட்டப்பூர்வமான தீர்வாக அமைப்பும். அதற்கு முன்பு தமிழகத்தில் உள்ள இஸ்லாமியர்களின் சமூக மற்றும் கல்வி நிலை, மதம் மாறிய இஸ்லாமியர்களின் சமூக, கல்வி நிலை குறித்து தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் மூலம் விரிவான ஆய்வறிக்கையை தமிழக அரசு பெற்றிட வேண்டும்.

மேலும் நேரடியாக உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வது உகந்தது அல்ல. மாறாக அரசாணை எண் 31 தொடர்பாக இரு நீதிபதிகள் அமர்வுகள் முரண்பட்ட தீர்ப்புகளை வழங்கியுள்ள நிலையில், இப்பிரச்னையை 3 நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு பரிந்துரைத்து விசாரிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அது வரை அரசாணை எண் 31 செல்லுபடியாகும் என நடைமுறைப்படுத்த வேண்டும். உச்ச நீதிமன்றம் செல்வதை விட, வரும் கூட்டத்தொடரில் சட்டம் இயற்ற வேண்டும்.

அரசியல் சட்டத்திற்கு முரணாக தொடர்ந்து செயல்படுவதுடன், நீதிபதியாக பதவியேற்கும் போது அரசியல் சட்டத்தின் பிரிவு 219ன் கீழ் எடுத்துக் கொண்ட உறுதிமொழியையும் மீறியுள்ள நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் மீது இந்திய பாராளுமன்றம் பதவி நீக்க நடவடிக்கையை தொடங்க வேண்டும். உச்ச நீதிமன்றம் அவர்மீது உள்ளித்துள்ளோம். அரசியல் சட்டத்தையும், ஜனநாயக விழுமியங்களையும் பாதுகாக்க விரும்பும் தமிழகத்தின் அனைத்து ஜனநாயக சக்திகளும் இம்மாநாட்டில் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இவ்வாறு கூறினர்.

▶ சிறுபான்மை மக்களுக்கு எதிரான தீர்ப்புகள், சட்ட நடவடிக்கைகள் குறித்து முன்னாள் நீதிபதி அரிபந்தாமன், முன்னாள் அமைச்சர் மனோதங்கராஜ், எம்எல்ஏக்கள் ஜவாஹிருல்லா, தமிமுன் அன்சாரி, வாஞ்சிநாதன், பசும்பொன் பாண்டியன் ஆகியோர் சென்னையில் நேற்று பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தினர்.

தெற்கு ரயில்வே

(கட்டுமான நிறுவனம்)

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்:OHE-CN-DYCEE-26-27-02-242 தேதி: 07.07.2026

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் சார்பிலும் அவருக்காகவும் துணை தலைமை மின்சார பொறியாளர் / **OHE**, கட்டுமானம், தெற்கு இரயில்வே, சென்னை எழும்பூர் அவர்கள், பின்வரும் பணிகளுக்காக மின்னணு ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார்.

பணி பற்றிய விவரம் : சேலம் கோட்டத்தில் போத்தனூர் **(PTJ)** யார்டு - ல் 25 **kV, 50 Hz,** சிங்கிள் பேஸ், ஏசி ட்ராக்ஷன் ஓவர்ஹெட் சாதனங்கள் வடிவமைத்து சப்ளை செய்து நிலைநாட்டி பரிசோதனை செய்து நிறுவுதல் மற்றும் பிற பணிகள்

ஒப்பந்தப்புள்ளி மதிப்பு : ₹ 9,64,92,560.00

ஒப்பப்புள்ளி காப்புறுதி தொகை : ₹ 19,29,900.00

ஒப்பந்தப்புள்ளி மூடப்படும் தேதியும் நேரமும் : 05.08.2026 அன்று 15.00 மணி

மேலும் விவரங்களுக்கு காண்க இணையதளம் **www.ireps.gov.in**

துணை தலைமை மின்சார பொறியாளர் / OHE,
மின்சார கட்டுமானம் / சென்னை - 8

வடக்கு மத்திய ரயில்வே

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 4920262027–114 **தேதி: 06.07.2026**

மின்-ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

இந்திய குடியரசுத் தலைவருக்காக மற்றும் அவர் மண்டல ரயில்வே மேலாளர் (பொறியியல்)/ வடக்கு மத்திய ரயில்வே/பிரயாக்ராஜ் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் பின்வரும் பணிகளுக்காக பின்வரும் மின்–ஒப்பந்தப்புள்ளிகளை **29.07.2026** தேதி **13:30 மணிக்குள்** வரவேற்கிறார். ஒப்பந்தப்புள்ளி தொடர்பான விவரங்கள் கீழே உள்ளன:

ஒப்பந்தபுள்ளி எண்.114 வேலையின் பெயர்: சியோகி நிலையத்தில் யார்டு மறுசீரமைப்புப் பணிகள், அகோரி காஸ் நிலையத்தில் லூப் லைன் எண் 1–க்கும் என்ஜின் சைடிங்கிற்கும் இடையிலான இணைப்புப் பணிகள் மற்றும் Sr.DEN/I/PRYJ–இன் கீழ் மேற்கொள்ளப்படும் பிற தொடர்புடைய சிவில் பணிகள்.	
வேலையின் தோராயமான செலவு [ரூ.]: ரூ.5,85,51,397.34	**ஏலப் பாதுகாப்பு [ரூ.]:** ரூ.11,71,000.00
வேலை நிறைவுறும் காலம்: 12 மாதங்கள்	**ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள்:** 29.07.2026
இதுபோன்ற வேலைக்கான தகுதி அனுவகோல்: எந்த நிரந்தரவழி பணி செய்திருத்தல்	

குறிப்பு–(1) மேற்கூறிய மின்–டெண்டர்களின் முழுமையான தகவல்கள் டெண்டர் திறக்கும் **29.07.2026 தேதியன்று 13:30 மணி வரை** www.ireps.gov.in என்ற இணையதளத்தில் கிடைக்கும். **(2)** மின்–ஏலங்களின் வடிவத்தில் இல்லாத ஏலங்கள் மேற்கண்ட டெண்டர்களுக்கு ஏற்றுக்கொள்ளப்படாது. இந்த நோக்கத்திற்காக, விற்பனையாளர்கள் தங்களை IREPS வலைத்தளத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும், மேலும் IT சட்டம்–2000 இன் கீழ் CCA ஆல் வழங்கப்பட்ட டிஜிட்டல் கையொப்ப சான்றிதழுடன் பதிவு செய்ய வேண்டும். **(3)** நிதி விகிதப் பக்கத்தில் உள்ளிடப்பட்ட மற்றும் முறையாக டிஜிட்டல் முறையில் கையொப்பமிடப்பட்ட விகிதங்கள் பரிசீலிக்கப்படும். விகிதங்கள் மற்றும் வேறு எந்த படிவத்திலும் / லெட்டர் ஹெட்டிலும் விற்பனையாளர்களால் இணைக்கப்பட்டிருந்தால், அவை உடனடியாக புறக்கணிக்கப்படும் மற்றும் பரிசீலிக்கப்படாது. **(4)** டெண்டர் எண் 114–இன் விளம்பரப்படுத்தப்பட்ட மதிப்பு 50 லட்சத்திற்கும் அதிகமாக இருப்பதால், இணைப்பு–V மற்றும் V(A) (ஆவணச் சரிபார்ப்புச் சான்றிதழ்) ஆகியவை தேவைப்படுகின்றன. பொருட்கள் மற்றும்/அல்லது சேவைகளை வழங்கும் விநியோகஸ்தர் அல்லது ஒப்பந்ததாரர், அவ்வப்போது நடைமுறையில் உள்ள ஜிஎஸ்டி சட்டம் மற்றும் விதிகளுக்குக் கட்டுப்பட்டவராவார். **(5)** இந்த டெண்டர் அறிவிப்பு www.ncr.indianrailways.gov.in இல் பதிவேற்றப்பட்டுள்ளது. **(6)** ஏதேனும் சிரமம் ஏற்பட்டால் IREPS இணையதளத்தில் உள்ள உதவி மையத்தை அணுகலாம். **(7) 29.07.2026 பிற்பகல் 13:30** மணி வரை ஆன்லைனில் டெண்டரை சமர்ப்பிக்கலாம். **(8)** அனைத்து டெண்டர்தாரர்களுக்கும் மின்–ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் எந்த விலையும் இல்லாமல் வழங்கப்படும் **(9)** ஒப்பந்தப்புள்ளி எண்.114: டெண்டர்தாரர் IRGCC–2022 இன் பிரிவு 10 முதல் 18 (பகுதி–I) இன் படி தேவையான ஆவணங்களை கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும், இல்லையெனில் சலுகை முழுமையற்ற சலுகையாகக் கருதப்படும், அதன்படி பரிசீலிக்கப்படாது.

1553/26 (MG)

North central railways @CPRONCR www.ncr.indianrailways.gov.in

pnb Housing Finance Limited Ghar Ki Baat

பிற்சேர்க்கை–IV–A அசையாச் சொத்து(கள்) மின்–ஏலம் பொது விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம் 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம்–விற்பனை அறிவிப்பு

பதிவு அலுவலகம்:- 9ஆவது தளம், அந்தரிக்ஷ பவன், 22, கஸ்தூரபா காந்தி மார்க், புதுடல்லி-110 001, தொலைபேசிகள்: 011-23357171, 23357172, 23705414, இணையதளம்: www.pnbhousing.com

கிளை முகவரி: எண் 69A, முதல் தளம், காந்தி ரோடு, ஹோட்டல் சரவண பவன் அருகில், காஞ்சிபுரம் – 631501 | கிளை முகவரி: எண் 16, முதல் தளம், முடிச்சூர் ரோடு, மேற்கு தாம்பரம், சென்னை – 600045

இதன்மூலம் பொதுவாக பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் நிரல் எண்–A இல் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) & ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குப் குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டுக் கடனீந்தோரிடம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, M/s. பிள்ளபி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ கடனீட்டுக் கடனீந்தோரின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் ஆக்கப்பூர்வகையக கவாதீனம் நிரல் எண்–C இல் விவரிக்கப்பட்டவாறு செய்யப்பட்டிருக்கும் நிரல் எண்–D இல் குறிப்பிட்டுள்ள கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்து(கள்) ஆனது, கீழே குறிப்பிட்ட விவரங்களின்படி, "உள்ளது உள்ளவிடத்தில், உள்ளது உள்ளவாறு மேலும் உள்ளது எதுவோ அது அடிப்படையில்" விற்பனை செய்யப்பட உள்ளது.

நாளது தேதியத் திருத்தப்பட்ட கடனீட்டுக் சொத்து உரிமை அமலாக்கம் விதிகள், 2002 இன் விதி 8(6) & 9 கீழ் நிரல் எண்–A இல் குறிப்பிட்டவாறு கடன்தாரர்(கள்)/அடமானதாரர்(கள்)/ சம்பந்தப்பட்ட கடன்தாரர்/ அடமானதாரர்(கள்) (இறந்தது முதல்) அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுகள், சட்டப்பூர்வ பிரதிநிதி, தெரிந்தது அல்லது தெரியாதது), நிறைவேற்றுநர்(கள்), நிர்வாகி(கள்), வாரிசு(கள்), உரிமையுற்றோர்(கள்) ஆகியோருக்கு இந்தமூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, M/s. பிள்ளபி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின்/கடனீட்டுக் கடனீந்தோரின் இணையதளம் அதாவது www.pnbhousing.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பினைப் படிக்கவும்.

கடன் எண்/ கடன்தாரர்/ ஜாமீன்தாரர்(கள்)/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர் (A)	கோரப்பட்ட தொகை & நாள் (B)	சுவாதீன தன்மை (C)	அடமானச் சொத்துகள் விவரம் (D)	நிரீணய விலை (RP) (E)	முன்வைப்புத் தொகை (நிரீணய விலையில் (10%) (F)	ஏலப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள் (G)	ஏலம் உயர்த்தும் விகிதம் (H)	பார்வையிடும் நாள் & நேரம் (I)	ஏலம் நாள் & நேரம் (J)	ஒதுக்கீடு விண்ணப்பங்கள் நிர்வாக வழக்கு ஏற்றுக்கொள்ளும் (K)
HOU/RKAN/1223/1193193S S.எல்லப்பன்/ E.ரேவதி ரோஷிணி கி.அ.: காஞ்சிபுரம்	Rs. 19,66,035.78 as on 18.10.2024	கையக	மனை எண்.39, ஸ்ரீகுமரன் நகர், S.No.15/1ஏ, புதிய S.No.15/7, ஏகனாம்பேட்டை கிராமம், வாலாஜாபாத் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம், தமிழ்நாடு, இந்தியா–631601.	Rs. 17,88,000	Rs. 1,78,800	27.07.2026	Rs. 10,000	16.07.2026 11:00 am to 5:00 pm	28.07.2026 2:00 pm to 3:00 pm	எதுவுமில்லை/ அறியப்படாதது
HOU/RTAMB/0524/1261219 வெங்கடேசன் V / யோகேஸ்வரி ஜானகிராமன், கி.அ.: மேற்கு தாம்பரம்	Rs. 22,50,153.60 as on 14.05.2025	கையக	S.No.527/2B,33, பழைய பட்டா எண்.14126, S.No.527/33 B, நகர், பழைய எண்.82, புதிய எண்.34, வரதராஜபுரம் கிராமம், குன்றத்தூர் வட்டம், காஞ்சிபுரம், அஞ்சல் குறியீடு:600048.	Rs. 24,36,000	Rs. 2,43,600	12.08.2026	Rs. 10,000	24.07.2026 11:00 am to 5:00 pm	13.08.2026 2:00 pm to 3:00 pm	எதுவுமில்லை/ அறியப்படாதது
HOU/RTAMB/0424/1249208 கபிலன் சூரியகுமார் /இந்திரகுமாரி முகுந்தன் கி.அ.: மேற்கு தாம்பரம்	Rs. 24,16,481.82 as on 14.05.2025	கையக	S.No.527/33, மனை எண்.40, பழைய எண்.82, புதிய எண்.24, சிவகாமி நகர், வரதராஜபுரம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், காஞ்சிபுரம், சென்னை, தமிழ்நாடு– 600048.	Rs. 23,28,000	Rs. 2,32,800	12.08.2026	Rs. 10,000	24.07.2026 11:00 am to 5:00 pm	13.08.2026 2:00 pm to 3:00 pm	எதுவுமில்லை/ அறியப்படாதது

•பொருந்துமாறு ஆண்டுக்கு 18% விகிதத்தில் மேற்கொண்டு வட்டி, அதற்கான பணப்பட்டுவாடா மற்றும்/அல்லது பணமாக்கும் தேதி வரை ஏற்பட்ட சாதாரண செலவினங்கள், செலவு கட்டணங்கள் ஏனையவற்றுடன் சேர்த்து. •• பிள்ளபி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரபூர்வ அதிகாரிக்கு நன்கு தெரிந்த மற்றும் அறிந்த வரையில், நிரல் எண்–K இல் அறிவிக்கப்பட்டது தவிர்த்து மேற்குறிப்பிட்ட அசையா/கடனீட்டுக் சொத்துகள் தொடர்பான பிற வில்லங்கங்கள்/ கோருரிமைகள் இல்லை. மேற்கொண்டு இவ்வித வில்லங்கங்கள் ஆனது வெற்றிபெறும் கொள்முதலாளர்/ஏலதாரர் மூலம் அவருடைய தரப்பில் வழங்கப்படவேண்டும்/செலுத்தப்பட வேண்டும். எதிர்நோக்கும் கொள்முதலாளர்(கள்)/ ஏலதாரர்கள் குறிப்பிட்டுள்ள வில்லங்கங்களின் உண்மைத்தன்மையை தனிப்பட்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. நாளது தேதிப்படி, மேற்கூறிய அசையாச் சொத்துகள்/கடனீட்டுக் சொத்துகளை விற்பனை செய்தல், உரிமை மாற்றுதல் மேலும்/அல்லது விற்றுத் தீர்ப்பதற்கு பிள்ளபி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ பிள்ள